Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 28 வியாழக்கிழமை [14-11-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 345

# படையினரின் 3காவலரண்கள்

# வவுனியாவில் முற்றாக அழிப்பு!

## அதி நவீன ஆயுதம் ஒன்று உட்பட பல இராணுவத் தளபாடங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 14

வவுனியாவில், பட்டாணிச்சூர் புளியங்குளம் இராணுவ காவல் அரண்கள் மீது நேற்று அதிகாலை 2 மணியளவில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இந்தத் தாக்குதலில் இராணுவத்தினரின் மூன்று காவல் அரண்கள் முற்றாக அழித்து நாசமாக்கப்பட்டன.

புலிகளின் இந்தத் திடீர் தாக்குதலில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டனர் என்றும், அதிநவீன ஆயுதம் ஒன்று உட்பட பல இராணுவ தளபாடங்கள் அங்கிருந்து கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் போரா ளிகள் மிகவும் துணிகரமாக காவல் அரண் பகுதிகளில் அதிரடி தாக்குதல் நடத்தி னர் என்றும்—

சுமார் 15 நிமிட நேரமே நடந்த இந்த அதிரடித் தாக்குதலின் போது அதி நவீன ஆயுதமான அல்டிமேட்ஸ் எல்.எம்.ஜி. ஒன்றும் கைப்பற்றப்பட்டது என்றும் தெரி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தொழில் இழந்தோருக்கு

## நிவாரணம் பெற்றுத்தர முயற்சி எடுக்கப்படும்

யாழ்ப்பாணம், நவ. 14

இராணுவ நடவடிக்கைகளில் தொழில் இழந்து பாதிக்கப்பட்டுள்ளோரின் குடும்பங்களுக்கு, மாதத்தில் ஒரு வாரமாவது இலவச உலர் உணவு வழங்குவது குறித்து கொழும்பு சென்றதும் நடவடிக்கை எடுப்பதாக அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர்

[3 ஆம் பக்கம் பார்க்க]

மூச்சந்தி முரளி



சவர்க்காரச் செய்தி "சப்" எண்டு போயிட்டுது கண்டியளோ......!

## நேற்று நகரில் மாணவர் பேரணி!

யாழ்ப்பாணம், நவ. 14

1990 ஆம் ஆண்டுக்குரிய ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையை 1991 டிசம்பர் பரீட்சைக்கு முன்பாக நடத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி நேற்று நூற்றுக்கணக்கான மாணவர்கள் யாழ். நகரில் சைக்கிள் பேரணி ஒன்றை நடத்தினர்.

பாதிக்கப்பட்ட — 1990ஆம் ஆண்டு ஜி. சி. ஈ. சாதாரண தரத்தைச் சேர்ந்த — மாணவர்கள் இந்தப் பேரணியை நடத்தினர்.

நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் கந்தர்மடம் பகுதியில் இருந்து ஆரம்பித்த பேரணியில் பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

மழையில் நனைந்தவாறு மாணவர் பேரணி யாழ். கல்வி அலுவலகம், யாழ்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மாவீரர் வாரத்தைக் கொண்டாட வடமராட்சியில் துரித ஏற்பாடுகள்

வடமராட்சி, நவ. 14

மாவீரர் வாரத்தையும் அதற்கு முந்திய மாவீரர் எழுச்சி வாரத்தையும் பிரமாண்டமான முறையில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் வடமராட்சிப் பகுதியில் துரிதமாகச் செய்யப்பட்டு வருகின்றன.

வீதிகள், சந்திகள், ஒழுங்கைகள், குச்சொழுங்கைகள் என்று எல்லா இடங்களிலும் அலங்கார வேலைகள் பூர்த்தி அடைந்து வருகின்றன. அலங்காரப் பந்தல்கள், வளைவுகள் ஆகியவற்றில் மாவீரர்களின் பங்களிப்புத் தொடர்பான கருத்தைக் கவரும் வண்ணச் சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன.

மந்திகை, நெல்லியடி, வல்வெட்டித்துறை மற்றும் பல பகுதிகளிலும் மாவீரர் வாரக் கொண்டாட்டத்துக்கு தேவையான பணிகளை மக்கள் சிரமதானமாகவே செய்து வருகின்றனர்.

மாவீரர் நாளன்று சரசாட்டத்தின் மூலம் மாவீரர்களின் மகிமையை எடுத்தியம்பும் கலை நிகழ்வுக்கும் ஏற்பாடாகி வருகிறது.

மாவீரர் வார இறுதிப் பிரதேச நினைவுக் கூட்டம் 27 ஆம் திகதியன்று பருத்தித்துறை பழைய பஸ் நிலையத்தில் நடைபெறும்.

நேற்று மழை பெய்த

(3 ஆம் பக்கம் பார்க்க)

ராஜீவ் கொலை தொடர்பாகத் தேடப்பட்ட

# முக்கிய நபரான காந்தன்

# சயனைட் அருந்தி மரணம்!

## திருச்சியில் நேற்றுச் சம்பவம்

சென்னை, நவ. 14

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வந்த முக்கிய சந்தேக நபர்களில் ஒருவரான காந்தன் என்பவர் நேற்று திருச்சியில் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டார் என்று மத்திய புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

ராஜீவ் கொலை தொடர்பாக சிவராசன், சுபா ஆகியோருக்கு அடுத்த முக்கிய நபராகத் தேடப்பட்டு வந்தவர் காந்தன் என்பது குறிப்பிடத்தக்கது.

திருச்சியில் உள்ள நாவல்பட்டு குடியிருப்புப் பகுதியில் காந்தன் தங்கி இருந்த வீட்டை பொலிஸார் முற்றுகையிட்ட போது வீட்டின் முன்பக்க, பின்பக்கக் கதவுகள் பூட்டப்பட்டிருந்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சயனைட் அருந்தி இதுவரை 27 ஈழத் தமிழர் மரணம்!

சென்னை, நவ. 14

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவத்தின் பின்னர், இந்திய அரசு எடுத்துவரும் நடவடிக்கையை அடுத்து இங்கு 27 ஈழத் தமிழர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த 27 பேரில் சிவராசன், சுபா, காந்தன் என்பவர்கள் முக்கிய நபர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியக் காவல் துறையினரிடம் பிடிபடாமல் தவிர்ப்பதற்காக இவர்களில் அநேகர் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குடாநாட்டில் கடும் மழை

யாழ்ப்பாணம், நவ. 14

குடாநாட்டில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக பல்வேறு இடங்களிலும் நீர் தேங்கி நிற்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள குளங்கள், குட்டைகள் அனைத்தும் நீரினால் நிறைந்து காணப்படுகின்றன.

இன்னும் சில தினங்கள் தொடர்ந்து மழை பெய்தால், பெரும் வெள்ள அபாயம் ஏற்படும் சாத்தியம் தென்படுகிறது. [ஓ-5]

## வங்கக் கடலில் புயல்!

வங்கக் கடலின் —தமிழகத்துக்கு— மேற்குப் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாகி வலுவடைந்துள்ளது.

இது மேலும் வலுவடைந்து மேற்கு, வடமேற்கு திசையை நோக்கி நகர்ந்து இன்று வியாழன் நண்பகல் அளவில் கடலூருக்கும் தெற்கு ஆந்திரப் பிரதேசத்துக்கும் இடையில் கரையைக் கடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாழ்வு மண்டலம் நேற்று நண்பகல் இரண்டரை மணி அளவில் சென்னைக்கு கிழக்கே, தென் கிழக்கே சுமார் 400 கிலோ மீற்றர் தொலைவில் நிலை கொண்டிருந்தது.

இன்று நண்பகல் இது கடலூருக்கும் தெற்கு ஆந்திரப் பிரதேசத்துக்கும் இடையில் கரையைக் கடக்கும்போது சுமார் 70 முதல் 80 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்று தமிழ்நாடு வானிலை ஆராய்ச்சி நிலையம் எச்சரித்துள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கடும் மழை பெய்து வருகிறது. [உ-இ]

## குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், நவ. 14

வவுனியா மாவட்டம், பெரியதம்பனைப் பகுதியில் நேற்றுக்காலை 7 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்று, குண்டுகளை வீசித் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் ஏழு குண்டுகள் வீசப்பட்டதாகத் தகவல்கள் கூறியபோதும், சேதங்கள் [illegible] தெரியவில்லை. [illegible]

# அதிகரித்த விலையிலேயே

# சவர்க்கார விநியோகம்!

## முந்திய முடிவில் நேற்று மாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 14

நேற்று ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்பட்ட சவர்க்கார — சலவைப் பவுடர் விநியோகம், கொழும்பிலிருந்து இறுதி நேரத்தில் வந்த அறிவிப்புக் காரணமாகத் தடைப்பட்டது.

நேற்றுச் சில நிர்வாகச் சிக்கல்கள் தீர்க்கப்பட்ட பின்னர், புதிய விலை நிர்ணயத்துடன் விநியோகம் இன்று முதல் ஆரம்பமாகும் எனத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட சுமார் நூறு தொன் சவர்க்காரமும், சலவைப் பவுடரும் தனியார் விற்பனை முகவருக்குச் சொந்தமானதா அல்லது யாழ். செயலகத்துக்குரியதா என்பதில் ஏற்பட்ட குழப்பம் நேற்றுத் தீர்த்து வைக்கப்பட்டது.

கப்பலில் எடுத்து வரப்பட்ட சவர்க்காரமும், சலவைப் பவுடரும் யாழ். செயலகத்துக்கே அனுப்பப்பட்டவை என்று நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து கொழும்பு விலையில் நேற்று முதல் இவை ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்படும் என யாழ். செயலக திட்டப் பிரிவு அறிவித்திருந்தது.

ஆனால் சம்பந்தப்பட்ட தனியார் விற்பனை முகவருக்கு கொழும்பிலிருந்து நேற்றுக் கிடைத்த தகவலின்படி, கப்பலில் எடுத்து வரப்பட்ட சவர்க்காரம் அந்த முகவருக்கே சொந்தமானது என்பது தெரிய வந்தது.

இதனையடுத்து அந்த முகவரிடம் இருந்து நிர்ணயிக்கப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஹேரத்தின் அறிக்கை: இந்தியா ஆச்சரியம்!

புதுடில்லி, நவ. 14

கொழும்பில் நடைபெற இருந்த ஆறாவது சார்க் மாநாடு ஒத்திவைக்கப்பட்டது குறித்து ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹேரத் வெளியிட்ட அறிக்கை குறித்து இந்தியா ஆச்சரியம் தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தகவல் தெரிவிக்கையில்—

சார்க் மாநாடு ஒத்திவைக்கப்பட்டதற்கு காரணமாக இருந்த சூழ்நிலை ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சரின் அறிக்கையில் சரியான முறையில் எடுத்துக் காட்டப்படவில்லை என்றார்.

1985 சார்க் பிரகடனத்தின் படி சார்க் நாடுகளின் தலைவர்கள் எந்த ஒரு தீர்மானத்துக்கும் ஒருமித்த முடிவுக்கு வரவேண்டும் என்று தெரிவிக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

A/L பௌதிக விஞ்ஞானத்தில் 2 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றவரும், நல்ல தமிழ், ஆங்கில அறிவு உள்ளவருமான ஒருவர் பகுதி நேர அடிப்படையில் தொழில்நுட்ப விஞ்ஞானம் எழுதுவதற்கு தேவை. 15 - 11 - 91 காலை 8 - 10 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு வரவும். அ. ஞானசம்பந்தன், 67, கல்லூரி வீதி, நீராவியடி. [18725]

சியூட்டரி வங்கு, மேசை உடன் தேவை. தொடர்பு கொள்ளவும்! விக்னா கல்வி நிறுவனம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி 0795]

## இடமாற்றம்

வேலணை வைத்தியர் இ. இரத்தினம் 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் சிகிச்சைகளைத் தொடர்கிறார் சகல நோயாளர்களும் வழமைபோல் சிகிச்சை பெறலாம். இடம் பெயர்ந்தோருக்கு சலுகை அடிப்படையில் சிகிச்சை அளிக்கப்படும். [18590]

வேலணை மேற்கில் இயங்கி வந்த 'நமசிவாயம் வைத்திய நிலையம்'' தற்பொழுது ஐயனார் கட்டடம் பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய் என்னும் முகவரியில் இயங்கி வருகிறது என்பதை அறியத் தருகிறேன். டாக்டர் செ. ந. சிவபாலன். D. A. M. & R. I. M P. (Cey.) [18727]

## ரைப்பிங் சேவை

தமிழ் - ஆங்கில (Stencils) ரைப்பிங் வேலைகள் மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகின்றன. ரைப்ரைட்டர் திருத்தல் விற்பனைக்கு உண்டு பியூட்டா, 39/17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் 3 ஆம் ஒழுங்கை. கிளை: பிரதான வீதி, மானிப்பாய். (சி/0791)

## திருமணசேவை

இலவச சேவை:- கொழும்பில் வேலை செய்யும் 28, M. B B. S, 8-செவ்வாய் திருவோணத்துக்கும், பிறவிச் சைவர்களான B sc ஆசிரியை 32, அனுஷத்திற்கும், B sc 30 மிருகசீரிடத்துக்கும் வரன்கள் தேவை. பல தரங்களில் மணமக்கள் கண்டு. விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். ஞாயிறு சந்திக்கலாம். துரைராசா விமலா, 958/8 கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [18731]

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடை பெறுமா? வெளிநாடு போகலாமா? உரிய பதில் தருவோம். ஜாதகம், குறிப்பு கைரேகை, விவாகப் பொருத்தம், எண்சோதிடம் பார்க்க தொடர்பு: த சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், 384 கோவில் வீதி நல்லூர் வடக்கு. [18739]

---

# ★ கலை, வர்த்தகக் கல்லூரி ★

C. C. A.

(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

## 92 DAY CLASSES

ஆரம்பம்: 18 — 11 — 1991

| | |
|---|---|
| பொருளியல் | — உதயன் |
| கணக்கியல் | — ஸ்ரீ |
| வர்த்தகம் | — இரட்ணம் |
| அளவையியல் | — பிரபல ஆசிரியர் |
| தமிழ் | — பிரபல ஆசிரியர் |

குறிப்பு: மேற்படி ஆசிரியர் குழு இந்நிறுவனத்தில் மட்டுமே கற்பிப்பர்

9 வினா விடை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

— நிர்வாகி.

(சி-0797)

---

# வைத்திய சேவை

தலைமுடி உதிர்கின்றதா? தலைமயிர் நரைக்கின்றதா? நரம்புத் தளர்ச்சியா? வாதரோகமா? தேக பருமனா? மாதவிடாய்க் கோளாறுகளா? எதுவானாலும் கவலை வேண்டாம்.

நாடுங்கள்! நலமடையுங்கள்!!

டாக்டர் த. சிவானந்தன்
D. A. M., R. A. M. P. (இலங்கை)

"சிவா வைத்தியசாலை"
384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.

[18738]

---

# யாழ், ரோட்டரிக் கழகம்
# இலவச ஆலோசனை சேவை

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட விளைவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கட்டட புனரமைப்பு வேலைகளில் இலவசமாக ஆலோசனை வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

தொழிற் சேவை இயக்குநர்,
(யாழ். ரோட்டரிக் கழகம்)
'விமலம்', நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-0796)

---

# நெல்லியடி மகளிர் கல்லூரி
# ஆண்டு - 6 அனுமதி

இக்கல்லூரி அனுமதிக்கான விண்ணப்பங்கள் 30 11-91 ஆம் திகதிவரை கல்லூரி அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

— அதிபர்.

(18735)

---

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 05 - 05 - 1941

மறைவு: 06 - 11 - 1989

திதி: 14 — 11 — 1991

அமரர்
## சபாரத்தினம் நகுலசிங்கரத்தினம்
(இலங்கை வங்கி அதிகாரி)

ஈராண்டு சென்றாலும்
நீங்காது எம் நெஞ்சில்
என்றென்றும் நிலைத்துள்ள
எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்.

கிரேசன் வீதி,
கொக்குவில்.

(18707)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## 92 DAY CLASSES
(8-00 — 2-00)

ஆரம்பம்: 18 - 11 - 1991
(காலை 8-00)

| | |
|---|---|
| பொருளியல் | - திரு. கலாகரன் |
| வர்த்தகம் | - திரு இரட்ணம் |
| கணக்கியல் | - திரு S. K. பிரபாகரன் |
| அளவையியல் | - திரு. வரப்பிரகாசம் |
| இந்துநாகரீகம் | - பிரபல ஆசிரியர் |
| தமிழ் | - பிரபல ஆசிரியர் |

மு. குறிப்பு:- அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி/ 0789)

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பூமலராய்: 25 11 1976

பூவிதழாய்: 06 11 1989

## குமரகுருநாதன் பரந்தாமன்
(யா/தமிழ்ச் சந்தையா வித்தியாசாலை மாணவன்)

திதி: 14—11—1991

சங்குவேலியில் உதித்தவன் பரதன்
சிறுவனாய் கல்வியில் சிறந்த வித்தகனாய்
பருவமாய் வளரும் பால் குமரன
கோவிலமைத்து வழிபாடும் இயற்றி
கொடைவள்ளலாய் பாதியில் நோயெனும்
கூற்றுவனுக்கு உடல் கொடுத்தாய்
சென்றன ஈராண்டுகள் எம் மனம்
உன் நினைவால் கலங்குதையா.

உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

'பரமகிரி' வாசா,
சங்குவேலி வடக்கு,
தம்பசெட்டி, மானிப்பாய்.

(18728)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 04 05 1934

உதிர்வு: 27 10 1990

## அமரர் வன்னியசிங்கம் சிங்கமாப்பாணர்
(ஓய்வு பெற்ற கணக்குப் பரிசோதகர்)

திதி: 14—11—1991

குறைவின்றி எங்களை யெல்லாம்
நிறைவுடனே வளர்த்து வைத்தீர்
உங்கள் எண்ணக் கனவுகள் நிறைவு பெற முன்
இறைவன் உங்களை அழைத்ததேனோ
ஆண்டொன்றான போதும் அழித்திடா
உங்கள் நினைவால் தினம் நாடி
நாமும் துதிக்கின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக!

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

நீதிராஜா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(18737)

---

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்



ஆண்டவன் படைப்பு: 12 - 10 - 1945

அநியாய அழிப்பு: 18 - 10 - 1988

திதி: 14—11—1991

அமரர்
## சின்னத்துரை சற்குணராஜா
(ராஜன்ஸ் கபே உரிமையாளர், சந்தையடி, மானிப்பாய்)

அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
எல்லோரினதும் நெஞ்சத்தில் - வாழ்ந்த
நீங்கள் எம்மை விட்டு பிரிந்து
மூன்று ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு நீங்காது

மனைவி, பிள்ளைகள்,
மைத்துனர்கள், உறவினர்கள்.

சந்தையடி,
மானிப்பாய்.

(18741)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கூழுக்கும், மீசைக்கும் ஆசையா?

வடக்கு - கிழக்குப் பகுதியில் நடக்கும் போரினால் நாட்டின் பொருளாதாரம் தளர்வடைந்து செல்கிறது. அங்கு நடக்கும் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டால் நாடு தடையின்றி சுபீட்சம் காண வழி பிறக்கும்; நாடு வளம் பெறும். — இவ்வாறு பிரதமரும் நிதி அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா தமது வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புச் செலவுக்கும், அகதிகள் நிவாரணத்துக்கு மெனப் பெருந்தொகை நிதி விரயமாகிறது என்ற உண்மை நிலையையும் வெளியிட்டு, அது குறித்து வருத்தமும் தெரிவித்திருக்கிறார் பிரதமர்.

வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல, போர் எங்கு நடப்பினும் அது வீண் செலவுதான். வீண் செலவு மட்டுமன்றி பேரழிவும், அளவெண்ணா இழப்புகளும் போரினால் விளைவதுண்டு. ஆக்கபூர்வமாக, அபிவிருத்தி நாடி எவ்வித பெறுபேறுகளையும் பெற முடியாது.

இப்போதைய போர் ஏன் நடக்கிறது?

தமிழர்களின் நியாயமான, நீதியான அரசியல் உரிமைகளை, பிறப்புரிமைகளை வழங்குவதற்குச் சிங்கள அரசுகளும், அரசியல்வாதிகளும் மறுத்து வருவதாலேயே ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழர்களின் உரிமைகளை ஆகக் குறைந்தது 1957இல் கைச்சாத்திடப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தால் கூட, பிரச்சினை இந்தளவுக்கு முற்றி போர் நடக்கும் அளவுக்கு வளர்ந்திருக்காது.

சிங்களத் தலைவர்கள், பேரினவாதிகள், பௌத்த மத குருமார்கள் இன்று மட்டும் என்ன திருந்திவிட்டார்களா? யதார்த்த நிலையைப் புரிந்துள்ளார்களா? இல்லை!

தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கும் விடயத்தில் அவர்கள் நாற்பது வருடங்களுக்கு முன்னர் எந்த நிலைப்பாட்டுடன் இருந்தார்களோ இப்போதும் அதே உணர்வுடன் தான் இருக்கிறார்கள்! தமிழர்களுக்கு உரிமைகளை வழங்காது சலுகைகளை மட்டும் வழங்கித் திருப்திப்படுத்தி விட நினைக்கிறார்கள்.

அதனால் தான் போர் நடக்கிறது. நாட்டின் பெரும் நிதிவளமும் வீணாகி, விரயமாகிறது. தமிழர்களின் உரிமைகளையும் வழங்கக் கூடாது. அதே வேளை போரும் நடக்கக்கூடாது என்று சிங்களத் தலைவர்கள் எண்ணுவது சிறுபிள்ளைத் தனமானது. கூழுக்கு ஆசைப்படும் அதே வேளை மீசைக்கும் ஆசைப்படுவது போன்றதாகும்.

போரை நிறுத்துவதற்கு அரசாங்கத்திற்கு இவ்வருட ஆரம்பத்திலேயே விடுதலைப் புலிகள் சந்தர்ப்பம் வழங்கினார்கள். அரசாங்கம் அதனைக் கருத்தில் கொள்ளாது, கவனத்தில் எடுக்காது தனது இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. போர் தொடர்ந்தால் பாதுகாப்புச் செலவு அதிகரிப்பது தடுக்க முடியாத ஒன்றே!

எனவே அரசாங்கம், தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே ஒரே வழி என்ற முடிவுக்கு வந்து இராணுவத் தீர்வு முயற்சியை முற்றாகக் கைவிட வேண்டும். தமிழர்களுக்குச் சலுகைகளைக் காட்டாமல் உரிமைகளை உறுதியாக வழங்கும் அரசியல் தீர்வு ஒன்றை வகுத்துச் செயற்படுத்த வேண்டும்.

இனியாவது சிங்களத் தலைவர்களும், அரசினரும் அவ்வழியை நாடுவரா?

## நாளை முதல் மாவீரர் கொடிவாரம்

## மாவீரர்நாள்-1991



விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம்

மாவீரர் நாளை முன்னிட்டு நாளை பதினைந்தாம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை, விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினர் கொடி வாரம் கொண்டாடவுள்ளனர்.

மாவீரர் நாள் கொடி பொது இடங்களிலும், கல்வி நிலையங்களிலும் நாளை முதல் விற்பனை செய்யப்படும் என்று வி. பு. மாணவர் இயக்கத் தலைமைச் செயலகம் அறிவித்தது.

மாவீரர் நாள் கொடியில், ஒரு புத்தகத்தின் மீது தமிழீழமும், மாவீரர் கல்லறையும் வரையப்பட்டு, இரண்டு கைகள் அவற்றைக் காப்பது போலக் காட்டப்பட்டுள்ளது. தாயகத்தை மீட்கும் பணியிலும் அதனைப் பாதுகாக்கும் பணியிலும் மாணவர்களின் கடமையைக் குறிப்பதாக இரண்டு கைகளும் உள்ளன. (அ)

## உணவுத் தட்டுப்பாடு குறித்து கொழும்பில் அரச அதிபர் பேசுவார்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். மாவட்டத்தில் தோன்றியுள்ள பெரும் உணவுத் தட்டுப்பாடு நிலைமை குறித்து கொழும்பில் அதிகாரிகளுடன் யாழ். அரச அதிபர் பேச்சு நடத்துவார்.

இதற்காக அரச அதிபர் திரு மாணிக்கவாசகர் நேற்று மாலை இங்கிருந்து கொழும்பு புறப்படவிருந்தார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளுடன் நேற்று மாலை பருத்தித்துறையிலிருந்து கப்பல் மூலம் அவர் புறப்பட இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் தாமதம்!

யாழ்ப்பாணம், நவ 14

சீரற்ற காலநிலை தொடர்ந்து நீடிப்பதால் பருத்தித்துறையில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் தடைப்பட்டுள்ளன.

கடல் கொந்தளிப்பாக இருப்பதாலும் மழையினாலும் நேற்றும் நேற்று முன்தினமும் இடையிடையே சிரமத்தின் மத்தியிலே பாஜ்கள் மூலம் பொருள்கள் இறக்கப்பட்டன.

'தைப்பான்', 'விக்கி' ஆகிய இரு கப்பல்களும் தற்போது பருத்தித்துறையில் தரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

## ராஜீவ்காந்தி கொலை வழக்கு; குற்றப் பத்திரிகை மார்ச் மாதத்தில்தான்

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் மத்திய புலனாய்வுக் குழு எதிர்வரும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யும்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் மத்திய புலனாய்வுத் துறை சிறப்புக் குழுவின் தலைமைப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. கார்த்திகேயன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கைவசம் உள்ள சாட்சியங்களை வைத்து வழக்கு விசாரணை நிறைவுபெறும் என்றும் முக்கிய குற்றவாளி எவரும் விசாரணைக்குத் தேவை இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-இ)

## பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் விரைவில் நிரந்தரமாக்கப்படுவர்

யாழ்ப்பாணம், நவ 14

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் விரைவில் நிரந்தரமாக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு முன்னோடி நடவடிக்கையாக, சம்பந்தப்பட்டவர்களது விவரங்களை அனுப்புமாறு உயர்கல்வி அமைச்சு சகல பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்று நிருபங்களை அனுப்பியுள்ளது.

இந்தச் சுற்றுநிருபம் நேற்று முன்தினம் யாழ். கல்வி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தது.

## அதிகரித்த விலையிலேயே..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்ட ஒரு விலையில் சவர்க்காரம் மற்றும் சலவைப் பவுடரைக் கொள்வனவு செய்து, மக்களுக்கு விநியோகிக்க யாழ். செயலக அதிகாரிகள் நேற்று முடிவு செய்தனர்.

கப்பலில் இப்பொருள்களை எடுத்து வருவதற்கு தனியார் விற்பனை முகவருக்கு ஏற்பட்ட செலவுகள் ஆகியவற்றைக் கணித்து சவர்க்காரம் மற்றும் சலவைப் பவுடருக்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இதனையடுத்து முன்னர் கொழும்பு விலையில் மக்களுக்குக் கிடைக்க இருந்த சவர்க்காரம் விலை அதிகரிப்புடன் இன்று முதல் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட குடும்ப அங்கத்தவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே பின்வரும் புதிய விலைகளில் சவர்க்காரம், சலவைப் பவுடர் என்பன விநியோகிக்கப்படும்.

130 கிராம் வொண்டலைற் — 15 ரூபா.

50 கிராம் சலவைத்தூள் பக்கெட் — 8 ரூபா.

275 கிராம் சலவைத்தூள் பக்கெட் — 35 ரூபா.

550 கிராம் சலவைத்தூள் பக்கெட் — 70 ரூபா.

இவ்வார இறுதிக்குள்ளேயே சவர்க்கார விநியோகத்தைப் பூர்த்தி செய்யுமாறு சகல ப. நோ. கூ. சங்கங்களையும் யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ-5)

## முக்கிய நபரான..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தன என்றும்—

பொலீஸார் மூடப்பட்டிருந்த கதவுகள், ஜன்னல்கள் ஊடாக ஐந்து சுற்றுக்கள் துப்பாக்கியால் சுட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கதவை உடைத்துக் கொண்டு பொலீஸார் வீட்டின் உள்ளே நுழைந்தபோது காந்தன் இறந்து கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அவரது தோளிலும் துப்பாக்கிச்சன்னம் ஒன்று பாய்ந்திருந்தது. தோளில் பாய்ந்த துப்பாக்கிச் சன்னம் உயிரைப் பறித்திருக்க மாட்டாது என்றும்—

சயனைட்டே அவரது மரணத்துக்குக் காரணமாக இருந்தது என்றும் பின்னர் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

விடுதலைப் புலிகளின் தீவிரவாதி என்று கருதப்படும் குணராஜ் என்பவர் செவ்வாய் இரவு ஈரோட்டில் இருந்து மோட்டார் சைக்கிளில் திருச்சி வந்துகொண்டிருந்த போது மத்திய புலனாய்வுப் பிரிவினர் அவரைப் பின் தொடர்ந்தனர்.

மோட்டார் சைக்கிளில் குணராஜை ஏற்றி வந்தவர் குணராஜை திருச்சியில் உள்ள சுந்தர் நகரில் இறக்கி விட்டபோது மத்திய புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கைது செய்தனர்.

அவர் கைதாவதற்கு முன் சயனைட்டை உட்கொள்ள முயன்றார் என்றும்—

புலனாய்வுப் பிரிவினர் இதனைத் தடுத்தபோது அதிகாரி ஒருவரின் கையை அவர் கடித்துவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குணராஜ் கொடுத்த தகவலை வைத்து புலனாய்வுப் பிரிவினர் கே. கே. நகரில் உள்ள மகேந்திரராஜா என்ற ஈழத் தமிழ் அகதியின் வீட்டுக்குச் சென்றனர். இந்த வீட்டுக்கு காந்தன் அடிக்கடி வந்து போவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மகேந்திரராஜா வீட்டில் கிடைத்த தகவலை அடுத்து ஈரோடு பெரியார் கல்லூரியின் முன்னாள் முதல்வரான ஞானசெபஸ்டியன் என்பவரின் வீட்டில் காந்தன் தங்கி இருப்பது தெரிய வந்தது.

ஞானசெபஸ்டியன் வீட்டை முற்றுகையிட்ட புலனாய்வுப் பிரிவினர் அங்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து ஆனந்தராஜா என்பவரின் வீட்டுக்குச் சென்றனர்.

அங்கு இடம்பெற்ற முற்றுகையின்போதே காந்தன் சயனைட் உட்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மத்திய புலனாய்வுப் பிரிவினர் தற்போது குணராஜ், மகேந்திரராஜா, ஞானசெபஸ்டியன், ஆனந்தராஜ் ஆகியோரைத் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

காந்தனின் சடலம் திருச்சியில் வைக்கப்பட்டிருக்கிறது.

## நேற்று நகரில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செயலகம், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு பணிமனை ஆகிய இடங்களைச் சென்றடைந்தது.

அங்கு வைத்து பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

யாழ் கல்வி அலுவலகத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வேலாயுதமும் —

யாழ் செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திரு. க. சண்முகநாதனும் மாணவர்களின் மகஜர்களைப் பெற்றுக் கொண்டனர். [உ-5]

## நிவாரணம்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

டாக்டர் தேவநேசன் நேசையா உறுதி அளித்துள்ளார்.

நேற்று யாழ். செயலகத்தில் நடந்த கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களது சீருடைகளை ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் விநியோகிக்கவும்—

ப. நோ. கூ. சங்கங்கள் தங்களுக்குரிய பொருள்களை கொழும்பிலிருந்து ஏற்றி வருவதற்கு தனிக் கப்பல் ஒன்றை ஒழுங்கு செய்ய தாம் கொழும்பில் முயற்சி எடுத்திருப்பதாகவும்—

அனேகமாக டிசம்பர் முற்பகுதியில் அக்கப்பல் யாழ்ப்பாணம் வரக்கூடியதாகவிருக்கும் என்றும் அவர் மேலும் சொன்னார். (அ-5)

## மாவீரர் .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

போதிலும் அலங்காரப் பந்தல்களை அமைக்கும் வேலைகள் நடைபெற்ற வண்ணம் இருந்தன.

இதேவேளை அல்வாய் முத்துமாரி அம்மன் கோவில் முன்றலில் நேற்று முன்தினம் செய்வாய்க்கிழமை ஒன்பது போராளிகளின் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அதேபோன்று கெருடாவிலில் 34 போராளிகளின் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. (அ-165)

## படையினரின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்படுகிறது.

புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதம் மற்றும் இராணுவ தளபாடங்கள் வருமாறு:-

★ அல்டிமேட்ஸ் எல். எம். ஜி — 1.

★ ஆற்குரியாறம் மகஸின்கள் — 2.

★ மேலதிக சுடுகுழல் — 1.

★ 5·56 ரவைகள் — 485

★ 7 62 ரவைகள் — 2 524

★ ஜே ஆர். ரக கைக்குண்டு — 1

★ தலைக்கவசம் — 2 [ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## நல்லதம்பி சிவக்கொழுந்து சுந்தரம்

நல்லதம்பி சிவக்கொழுந்து சுந்தரம் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் எலிசபெத் (சின்னராசா) வின் அன்புக் கணவரும், வில்லியலர், தேவரஞ்சிதம், சித்திராதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், எம். ஜே. குணரெத்தினம் (பிரதம தபாற் சுந்தோர், யாழ்ப்பாணம்), இ. குமாரசாமி (சவூதி அரேபியா), எஸ். செல்வநாயகம் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், திருமதி பூரணம் பொன்னையாவின் சகோதரரும், சுரேஷ், சுபத்திரா, வெறோனிக்கா, ஜறீன், நிமலன், ரேணுகா, மேர்சியா, சன்ஷியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை (14-11-91) பிற்பகல் 3-00 மணிக்கு இல. 39/2, சோமசுந்தரம் அவெனியூ இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக பரி. யோவான் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப் படும்.

தகவல்:
த. சந்திரராஜா

இல. 183, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். [18744]

## திரு. வ. நாகலிங்கம்

திரு. வ. நாகலிங்கம் அவர்கள் 95ஆவது வயதில் காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், கனகம்மா, காலஞ்சென்ற வேலாயுதம் அன்னலட்சுமி, காலஞ்சென்ற கனகரத்தினம் கமலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், முத்துத்தம்பி இராசமணியின் சிறிய தந்தையும், ஐயாத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்), வேலாயுதம், கனகரத்தினம் (தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற முத்துத்தம்பி (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ராதா, துளசி, செந்தில், முகுந்தன், உதயசீலன், உதயசூரியன், பாஸ்கரன், மனோகரன், செல்வஸ்தரன் (ஆசிரியர்), சக்திவேல் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 14-11-91 முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. கனகரத்தினம்

பொலீஸ் நிலையத்தடி,
சுன்னாகம். [18754]

## சங்கரப்பிள்ளை கனகலிங்கம்

(ஓய்வுபெற்ற சிங்கர் கொம்பனி முகாமையாளர்)

சங்கரப்பிள்ளை கனகலிங்கம் 11-11-91 அன்று சாவகச்சேரியில் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சாவகச்சேரியில் நடைபெறும்.

தகவல்:
யோகா பிரபாகரன்

பெரிய மாவடி வீதி,
சாவகச்சேரி. [18755]

## திருமதி விடியா புண்ணியவதி மகாலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை)

திருமதி விடியா புண்ணியவதி மகாலிங்கம் காலமானார்.

இவர் காரைநகர் ஆலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அல்வாயில் வசித்தவருமாவார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியர் கோ. மகாலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், வின்சன் குணாளன் (நாவற்குழி, திருமலை), வின்சன் கோமகன் (ஆசிரியர்), வின்சன், குலமகன் (ஜேர்மனி), வின்சன் திருமகன் (நோர்வே), கோமதி (Vet. Surgeon-மன்னார்), பரமதி, குலமதி ஆகியோரின் அன்புத் தாயாரும் அன்னமேரி நீடா குணாளன், மகேந்திராவதி கோமகன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 14-11-91 வியாழன் காலை 9 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோ. மகாலிங்கம்

மாறாம்புலம்,
அல்வாய், மேற்கு. [18753]

## கருத்தரங்கு

அராலி, நவ. 14

போர்க்கால சூழல் காரணமாக மாணவர்கள் மத்தியில் ஏற்படும் உளவளப் பாதிப்புகள் தொடர்பான சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கல்வித் திணைக்களமும், சுகாதாரப் பிரிவும் இணைந்து இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளன. (த)

## விபுலாநந்தர் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 14

தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையில் நாளை பிற்பகல் 12-30 மணிக்கு விபுலாநந்த அடிகளார் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. (ஓ)

## கூட்டுறவாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 14

கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், இரண்டாம் படி கூ. ச. தலைவர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல், நாளை பிற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும். (ஓ)

## முல்லையில் குளங்கள் நிரம்பின!

புதுக்குடியிருப்பு, நவ. 14

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல குளங்கள் நிரம்பி உள்ளன. கடந்த வாரம் அங்கு பெய்த கடும் மழை காரணமாக வயல்களிலும், காடுகளிலும் வெள்ளம் தேங்கி உள்ளது.

மேலும் தொடர்ந்து மழை பெய்யுமானால் முத்தையன்கட்டு, ஒலுமடு ஆகிய குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயம் உண்டு எனக் கருதப் படுகிறது. (க-126)

## அரசகரும மொழி ஆணைக்குழு

கொழும்பு, நவ. 14

அரசகரும மொழிகள் ஆணைக்குழு அங்கத்தவர்களை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

ஜனாதிபதி வழக்கறிஞர் டெஸ்மண்ட் பெர்னாண்டோ ஆணைக்குழுவின் தலைவராகவும் கே. விக்னராஜா, வி. குணசேகரா, பேராசிரியர் கே. என். தர்மதாச, பி. ரி. மாணிக்கம், ஜனாப் எஸ். எம். ஜிப்ரி ஆகியோர் இதன் அங்கத்தவர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், நவ. 14

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் வலிகாமம் பிரிவு கோட்டணி மற்றும் கிராமிய தொடர்பாளர்களுக்கும் ஏனைய மாணவர் இயக்க உறுப்பினர்களுக்குமான ஒன்றுகூடல் இன்று மாலை 4 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. (உ)

## ஹேரத்தின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பூட்டான் மன்னருக்குப்பதிலாக அவரின் பிரதிநிதி ஒருவர் மாநாட்டில் கலந்து கொள்ளும் நிலை ஏற்பட்டிருக்குமானால் அது விரும்பத்தகாத நிலைமையை தோற்றுவித்திருக்கும் என்று அவர் மேலும் சொன்னார். (உ-இ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் [illegible] இல் உள்ள அச்சகத்தில் [illegible] பட்டது.

# வேலை நிறுத்தம் செய்யும் மருத்துவருக்கு எச்சரிக்கை

தற்போது தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் பதிவு செய்யப்பட்டுள்ள மருத்துவ உத்தியோகத்தர்களும், உதவி மருத்துவ உத்தியோகத்தர்களும் இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன் வேலைக்குத் திரும்பாவிடில் யாழ்ப்பாணம், காலி மருத்துவக் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் 100 மருத்துவர்களைக் கொண்டு அந்த இடங்கள் நிரப்பப்படும்.

சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

பதிவு செய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்களும், உதவி மருத்துவ உத்தியோகத்தர்களும் இம்மாதம் 6ஆம் திகதி முதல் ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே.

இவர்களது ஒன்பது கோரிக்கைகளில் ஏழு கோரிக்கைகள் ஏற்கப்பட்டு விட்டன என்றும் அமைச்சர் ஹேரத் தெரிவித்தார்.

உதவி மருத்துவ உத்தியோகத்தர்கள் தமது மூன்றாண்டு காலப் பயிற்சியை முடித்துக் கொண்டதும் அவர்கள் தம்மைப் பதிவு செய்துகொள்ள முடியாது என்றும்—

அவர்கள் பரீட்சையில் சித்தி அடைந்து எட்டு ஆண்டுகள் திருப்திகரமாகச் சேவை ஆற்றிய பின்னரே பதிவு செய்து கொள்ளத் தகைமை உடையவர்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

டிப்ளோமா பரீட்சையில் சித்தி அடைந்தோர் நான்கு ஆண்டுகள் திருப்திகரமாகச் சேவை ஆற்றியபின்னர் பதிவு செய்துகொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

பதிவு செய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள், உதவி மருத்துவ உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பெயர்கள் மாற்றப்படமாட்டாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

எனினும் சத்திர சிகிச்சை உத்தியோகத்தர்கள் அல்லது மருத்துவ சத்திர சிகிச்சை உத்தியோகத்தர்கள் என்று உதவி மருத்துவ உத்தியோகத்தர்கள் அழைக்கப்படலாம் என்று யோசனை செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

# சார்க் குழம்பியதற்கு இந்தியா காரணமில்லை

## மாலைதீவு ஜனாதிபதி கூறுகிறார்

புதுடில்லி, நவ. 14

கொழும்பில் நடைபெறவிருந்த ஆறாவது சார்க் உச்சி மாநாடு சென்றவாரம் ஒத்தி வைக்கப்பட்டதற்கு யாரையும் குறை கூற முடியாது.

சார்க் அமைப்பின் தற்போதைய தலைவரும் மாலைதீவு அதிபருமான திரு. மஹ்மூன் அப்துல் கையூம் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இப்படித் தெரிவித்தார் என இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

சில உள்நாட்டுப் பிரச்சினைகள் காரணமாக பூட்டான் மன்னர் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாமல் போனதை அடுத்து மாநாட்டையும் திட்டமிட்டபடி நடத்த முடியாமற் போயிற்று என்றும்—

மாநாடு ஒத்திப்போடப் பட்டமைக்கு இந்தியாவின் நிலையே காரணம் என்ற இலங்கையின் குற்றச்சாட்டை தாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அவர் அந்தப் பேட்டியில் தெரிவித்தார் என இந்திய வானொலி தெரிவித்தது. (க-5)

## பல்கலை மாணவர் கூட்டம் இன்று

யாழ். பல்கலைக்கழக கலைத்துப் பீட மாணவர்களுக்கான கூட்டம் ஒன்று, இன்று நண்பகல் 12 மணியளவில், கைலாசபதி அரங்கில் நடைபெறும் என்று கலைப் பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ஓ)

## படையினர் கைப்பற்றினராம்

கொழும்பு, நவ. 14

கிழக்கு மாகாணத்தில் மன்னம்பிட்டிக்கு வடக்கே தமிழ்த் தீவிரவாதிகளின் மறைவிடம் ஒன்றை ஆயுதப்படையினர் கைப்பற்றினர் என்று இலங்கை வானொலி அறிவித்தது.

மக்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து இந்த முற்றுகை நடத்தப்பட்டதாக லங்காபுவத் தெரிவித்தது.

# மரண அறிவித்தல்

## திருமதி இரத்தினம் சிவசுப்பிரமணியம்

வீமன்காமத்தைச் சேர்ந்த திருமதி இரத்தினம் சிவசுப்பிரமணியம் 12-11-1991 இரவு சுதுமலையில் காலமாகிவிட்டார்.

அன்னார் இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர் கந்தையா சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சிவக்குமார் (சவூதி), இரத்தினகுமார் (தேசிய இளைஞர் சேவை மன்றம், கிளிநொச்சி), விஜயகுமாரி (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பளை), அருட்குமார (மாணவன், தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், மின்னொளி வதனியின் (ஆசிரியை, முல்லைத்தீவு மகா வித்தியாலயம்) அன்பு மாமியாரும், ஜராசந்தனின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-11-1991 சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சிவசுப்பிரமணியம்
(கணவன்)
வீமன்காமம், தெல்லிப்பளை

சுதுமலை அம்மன் கோவில் ஒழுங்கை,
(உ. [illegible]),
சுதுமலை மேற்கு, மானிப்பாய். [18736]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org